# வாகன கடன் (Peoples Auto)

PEOPLE'S BANK
Pride of the Nation

நீங்கள் உங்கள் வாகனத்தின் தரத்தை உயர்த்தினாலும், அல்லது புதிய ஒன்றைச் சேர்த்துக் கொண்டாலும் உங்கள் வாழ்க்கைக்கு வாகனத்தின் வசதியை கூட்டிக்கொள்ளும் தேவையை நாம் புரிந்துகொள்ளுகிறோம். உங்களுடைய கனவு வாகனத்திற்கு இலகுவான நிதியிடலின் மூலம் ஒவ்வொருவரின் கனவை நனவாக்குவதில் நாம் ஈடபட்டிருக்கிறோம். உங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வாகனங்களைக் (தனிப்பட்ட பாவனைக்கு) கொள்வனவு செய்ய முடியும், அல்லது வங்கி ஏற்றுக்கொள்ளக் கூடிய பிணைப்பொறுப்புடன் உங்கள் வியாபார வெற்றிக்காக "மக்கள் ஊர்தி கடன்" பெற்றுக்கொள்ள முடியும்.

## விஷேட நன்மைகள்

- விஷேட வட்டி வீதங்கள்
- குறைவான ஆவணங்கள்
- இணையதளத்தின் ஊடாக நிகழ்நிலையில் (online)விண்ணப்பிக்கும் வசதி
- ஆகக் கூடிய மீளச் செலுத்தும் காலம்
- மூலதனத்தை (capital) மீளச் செலுத்துவதற்கு 5 வருடங்கள் வரை சலுகைக் காலம்

## தகுதி அளவுகோள்

- கடன் பெறுபவர் நிலையான மாதாந்த வருமானத்துடன் சம்பளம் பெறுபவராக/வியாபாரியாக/சுயதொழிலில் ஈடபட்ட தனிப்பட்டவராக இருக்க வேண்டும்.

- கடன் பெறுபவர் 18-70 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

- வாகனமொன்றைக் கொள்வனவு செய்வது நோக்கமாக இருக்க வேண்டும். அத்துடன் வாகனத்தின் ஈட்டை பிணைப்பொறுப்பாகப் பெற்றுக்கொள்ளப்படும். வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் வங்கிக்கு உரிமை மாற்றி பெறப்படும். மேலும் வாகனத்தின் அனைத்தையும் உள்ளடக்கிய காப்புறுதிப் பத்திரம் சந்தைப் பெறுமதிக்கு வங்கிக்கு உரிமை மாற்றப்பட வேண்டும்.

## ஏற்புடையதான வட்டி வீதம்

www.peoplesbank.lk என்ற மக்கள் வங்கி இணையத்தளத்தைப் பார்க்கவும்.

## உடன்படிக்கை காலம்

ஆகக் கூடிய மீளச் செலுத்தும் காலம் 07 வருடங்களாகும். வாகனத்தின் நிலையைப் பொறுத்தாகும் (புத்தம் புதியது , பாவித்தது அல்லது மறு சீரமைக்கப்பட்டது)

## கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகு, வட்டி போன்றவை.

- நிலையான/மாறுபடக் கூடிய வட்டி வீதங்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிலையான மற்றும் மாறுபடக்கூடிய வீதங்கள்.
- தவணை கடந்த மூலதனத்தின் மீது அபராத வட்டி.
- தவணை கடக்கும் தவணைப் பணத்திற்கு அபராதம்.
- வழக்கத்தில் உள்ள ஆவணப்படுத்தல் கட்டணங்கள்.
- வழக்கத்தில் உள்ள கடன் தொகையை முற்கூட்டியே செலுத்தி தீர்க்கும் கட்டணங்கள்.
- மதிப்பீட்டு கட்டணங்கள் (ஏற்புடையதானால்)
- சட்ட கட்டணங்கள் (ஏற்புடையதானால்)
- முத்திரை வரி (ஏற்புடையதானால்)
- காப்புறுதி காப்பீடு (ஏற்புடையதானால்)

## விண்ணப்ப அளவுகோல்

- www.peoplesbank.lkஇற்கு விஜயம் செய்து நிகழ்நிலையில் விண்ணப்பிக்கவும்
- 03 மாத சம்பள பதிவேடுகளுடன் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைக்கு அல்லது சேவை நிலையத்திற்கு விஜயம் செய்யவும் அல்லது அழைப்பை ஏற்படுத்தவும்

## முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும்

- இலங்கை ரூபாவில் (LKR) மாத்திரம் கடன் வசதிகளை பெற முடியும்.
- சம்பளத்தை/கடன் தவணைப் பணத்தை மக்கள் வங்கியில் பேணப்படும் கணக்கிற்கு மாற்றுவதற்குப் பொறுப்பேற்கும் கடிதத்தை தொழில் தருநரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஏற்றுக்கொள்ளக்கூடிய CRIB அறிக்கை
- முன்மொழியப்பட்ட கடன் தவணைப் பணம் மற்றும் ஏற்கனவே இருக்கின்ற கழிவுகள்/கடன் பொறுப்புக்கள் தேறிய சம்பளத்தில் 50%இற்குள் இருக்க வேண்டும்.
- சம்பளம் பெறும் கடன் பெறுபவர்கள் மீளச் செலுத்தும் காலம் ஓய்வுபெறும் வயது வரை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

## முறைப்பாட்டைக் கையாளும் நடைமுறை

- கடன் பெறுபவர் info@peoplesbank.lkஇன் ஊடாக எங்களை அணுக முடியும்
- சம்பந்தப்பட்ட கிளைக்கு, பிராந்திய தலைமை அலுவலகத்திற்கு அல்லது தலைமை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும்.
- சம்பந்தப்பட்ட கிளையை, பிராந்திய தலைமை அலுவலகத்தை அல்லது தலைமை அலுவலகத்தை அழைக்கவும்

## மேலதிக தகவல்களுக்கு

- www.peoplesbank.lk விஜயம் செய்யவும்
- அழைப்பு நிலையம் - 1961
- தலைமை அலுவலகம் 0112481481